மிக அதிகமான கிராமங்களில் போக்குவரத்து வசதி ஏற்படும். அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று பதில் கூறியதற்கு நன்றி கூறி, அதற்கு எவ்வளவு மதிப்பீடு என்பதை அறிவிக்க முடியுமா? எப்பொழுது செயல்படுத்த வேலைகள் துவங்கப்படும் என்பதையும் அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 24 மைல் நீளம் உள்ள இந்தச் சாலை அமைப்பதற்கு ரூ. 60 லட்சம் மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. இன்டென்சிவ் அக்ரிகல்சரல் டெவலப்மெண்டு ப்ரோகிராம்—தீவிர சாகுபடித் திட்டத்தின்—கீழ் இதுபற்றி அரசாங்கத்திற்குச் செயற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசாங்கத்தின் ஆய்வில் இருந்து வருகிறது.

நாகநதி ஆற்றின் குறுக்கே அணை

*** 828 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுக்கா, கனியம்பாடி தொகுதியில் உள்ள நாகநதி ஆற்றில் (கீழரசம்பமடு கிராமத்துக்கு அருகில் உள்ளது) சிறு பாசனத் திட்டத்தின் கீழ் அணை ஒன்று கட்டப்படும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

கோவை நகரில் உள்ள சிறப்பங்காடிகள்.

*** 829 வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் தற்போது சூப்பர் மார்க்கெட்டுகள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளில் எத்தனை தாழ்த்தப்பட்ட ஆண்/பெண் பணியாளர்கள் உள்ளனர்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஒன்று.

(இ) ஆண் 6, பெண் இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, சூப்பர் மார்க்கெட்டுகள் அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் நடைபெறுகின்றன. சூபர் மார்க்கெட்களில் அரிசனங்களை 100-க்கு 18 பேர்கள் எடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா? அப்படி எடுக்காவிட்டால் சூபர் மார்க்கெட்டுக்கு அனுமதி கொடுப்பதற்கு அரசு மறுக்குமா?

1973 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, சூப்பர் மார்கெட்டாக இருந்தாலும் சரி அல்லது வேறு கூட்டுறவு நிறுவனமாக இருந்தாலும் சரி, அந்த நிறுவனங்களுக்கு அவர்களுடைய சிப்பந்திகளை, ஊழியர்களை நியமித்துக் கொள்ள அதிகாரம் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் குறைவாகத் தான் சிப்பந்திகளாக, ஊழியர்களாக இருக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது என்பதை அரசு உணர்கிறது. அந்தக் குறையை நீக்குவதற்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிர்வாகத்தில் இடம் கொடுத்தால் போதும் என்று இந்த அமைச்சு நம்புகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சூப்பர் மார்கெட்டுகள் லாபத்தில் நடக்கிறதா? அல்லது மினி சூப்பர் மார்கெட்டுகள் லாபத்தில் நடக்கின்றதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்தக் குறிப்பிட்ட சூப்பர் மார்க்கெட் லாபத்தில்தான் நடக்கிறது. இதில் ஏறத்தாழ ரூ. 4 கோடிக்கு மேல் வரவு-செலவு ஆகிறது. சில வருடங்களில் ரூ. 3 லட்சத்திற்கு மேல் லாபம். இந்த வருடத்தில் ரூ. 2½ லட்சம் லாபம். மினி மார்க்கெட்கள் 29-ல், 28 லாபத்தில் நடைபெறுகின்றன.

திரு. கே. என். குமாரசாமி: 10,000 பேர்கள் வசிக்கின்ற நகரங்களில் இந்த மினி சூப்பர் மார்கெட் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 10,000 பேர்கள் என்ற அந்த அளவுகோல் இல்லை. நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 2,000 அளவுக்கு விற்பனையாகக் கூடிய ஊர்களில் மினி சூப்பர் மார்கெட், சிற்றங்காடிகள் திறப்பதற்குச் செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: இந்த சூப்பர் மார்க்கெட் நல்ல தரமான சரக்குகளை சப்ளை செய்வதாலும், நல்ல நியாயமான விலையில் அங்கே சாமான்கள் கிடைப்பதாலும் மக்கள் திருப்தி அடைகிறார்கள். ஆகவே, மதுரை ஜனநெருக்கடி உள்ள இடமாக இருப்பதால், அங்கே இன்னும் அதிகமாக ஒன்றிரண்டு சூப்பர் மார்க்கெட்கள் அமைப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மதுரையில் மேற்கொண்டு சூப்பர் மார்க்கெட் திறப்பது என்பது இப்பொழுது அரசின் ஆய்வில் இல்லை. ஏற்கனவே நடைபெறுகின்ற சூப்பர் மார்க்கெட் நஷ்டத்தில் நடைபெறுகிறது. ஆகவே, மதுரை நகரத்தை யொட்டி மேற்கொண்டு சூப்பர் மார்க்கெட் திறப்பது சற்று ஆலோசித்துச் செய்ய வேண்டிய காரியமாக இருக்கிறது.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகையில் உள்ள கலைஞர் கருணாநிதி சிறப்பு அங்காடிக்குக் கிளைகள் ஏற்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா?

[1972 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்து அனுப்பச் சொல்ல முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சூப்பர் மார்க்கெட் என்பதற்கு சிறப்பு அங்காடி நல்ல தமிழ்ப் பெயரா ? அல்லது பேரங்காடி நல்ல தமிழ்ப் பெயரா ? இதை அரசு பரிசீலனை செய்து எது நல்லது என்று அறிவிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சிறப்பு அங்காடி என்று சொல்ல முடியும். சூப்பர் மார்க்கெட், மினி மார்க்கெட் என்று இரண்டு வகை இருக்கிற காரணத்தினால், ஒன்றை பேரங்காடி, மற்றொன்றை சிற்றங்காடி என்று சொல்லத் தேவைப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிற்றங்காடியா, சிறப்பு அங்காடியா ?

கள்ளக்குறிச்சி வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்

*** 830 வினா.—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் செயல்படவில்லை என்றும், கடன் தவணை முறைப்படி சரியாக வசூலாகவில்லை என்றும் சொல்லப் படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம். சங்கம் 1—7—1964 முதல் செயல்படவில்லை. சங்கத்திற்குக் கொடுத்த கடனில் 1—3—1972-ல் அசல் ரூ. 2,910.46-ம் வட்டி ரூ. 4,333.70-ம் தவணைப்படி வசூலாகவில்லை.

(இ) சங்கத்தை செயல்படுத்த திருக்கோயிலூர் கூட்டுறவுத் துணைப் பதிவாளர் 7 இயக்குநர்களை புதிதாகத் தேர்ந்தெடுத்து சங்கத்தின் குழுவை 18—3—1970-ல் புதிதாக அமைத்தார். ஆனால் சிறிது காலத்திற்குப் பின் இச் சங்கம் மறுபடியும் செயல்படவில்லை. ஆகவே கூட்டுறவுத் துணைப் பதிவாளர் முதுநிலை ஆய்வாளரை பொதுச்சபையைக் கூட்டி நிர்வாகக் குழுவைத் திரும்ப அமைக்க அதிகாரம் அளித்திருக்கிறார். தேர்தல் அதிகாரி தேர்தல் நடத்து வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். கூட்டுறவுத் துணைப் பதிவாளர் தவணை கடந்த கடன்களை அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

திரு. ந. நாச்சியப்பன் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கம் வீடு கட்டுவதற்கு வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் வீடுகள் கட்டப்படவில்லை ; சங்கம் செயல்படாமல் இருக்கிறது. ஆகவே இந்தச் சங்கத்தை நல்லமுறையில் நடைபெறச் செய்ய மானியங்கள் வழங்க வேறு சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.